## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செந்தில்குமார் | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**5.3.2024 OS No. 8/2020 வா.சா.1** செந்தில்குமார் **ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறக்கு விசாரணை தொடர்ச்சி:**

4. ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கு தீர்ப்பான பின்பு தாவா சொத்தை நாங்கள் அனுபவித்து வந்தோம் என்பதை காட்ட ஆவணங்கள் உள்ளதா என்றால் பத்திரம் உள்ளது. தாவா சொத்து என்பது வீடு என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வீட்டு வரி ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முன் வழக்கான மு.வ.எண்.7/2004-க்கு பின்பு நாங்கள் தாவா சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. முன் வழக்கான மு.வ.எண்.7/2004-23.1.2006-ம் தேதி தீர்ப்பானது என்றால் சரிதான். முன் வழக்கான மு.வ.எண்.7/2004-தீர்ப்பிற்கு பின்னீடு 15.2.2006-ம் தேதியில் வாதிகளாகிய நாங்களும், பிரதிவாதிகளும் எங்களது பொதுகுடும்ப சொத்துக்கள் சம்மந்தமாக பேசினோம் என்றால் சரிதான்.

5. அந்த பேச்சுவார்த்தையில் பொதுகுடும்பத்திற்கு பாத்தியமான மதுரையில் உள்ள கடையை நான் எடுத்துக்கொள்வது என பேசினோம் என்றால் சரியல்ல. மதுரையில் அவ்வாறு கடையே இல்லை. மதுரை கடைக்கு பதிலாக தாவா சொத்தை பிரதிவாதி அனுபவித்துக்கொள்வது என பேசிக்கொண்டோம் என்றால் இல்லை. 15.2.2006-ம் தேதியின்று தாவா சொத்தை பிரதிவாதிகள் சுவாதீனம் அடைந்துவிட்டார்கள் என்றால் இல்லை. அதனால்தான் அந்த வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பேச்சுவார்த்தை நடந்து பிரதிவாதிகள் தாவா சொத்தை அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. தாவா வழக்கு சொத்து ஏற்கனவே காரை வீடாகதான் இருந்தது என்றால் சரிதான். காரை வீடு என்றால் உத்தரம் மற்றும் கட்டைகள் அமைக்கப்பட்ட காரை வீடாகும். நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும், தாவா சொத்து காரை வீடு என்றுதான் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். நான் பிராதில் சொல்லியுள்ளதுபோல் தாவா சொத்து இன்று வரை காரை வீடாக இல்லை என்றால் சரியல்ல. காரைவீடாகதான் உள்ளது. 5.9.2006-ம் தேதியில் வீட்டின் மேல் உள்ள உத்தரக்கட்டைகளை அகற்றிவிட்டு ஏற்கனவே இருந்த சுவரில் 5 அடி உயரக்கட்டிடம் கட்டப்பட்டது என்றால் சரியல்ல.

7) 5 அடிக்கு மேல் சென்டிரிங் போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 5 அடி உயர்த்தி சென்டிரிங் போட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் இன்று வரை வீட்டு வரி செலுத்திவருகிறார்கள் என்றால் அது பொது வீடாகும். பொது வீடு என்பதற்கு என்ன அர்த்தம் என்றால் அதில்

எங்களுக்கும் பாத்தியம் உள்ளது. பிரதிவாதிகளுக்கும் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் தாவா சொத்து பொது வீடு இல்லை என்றாலும், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தனித்த வீடு என்றால் சரியல்ல. எனக்கு தெரிய 15.2.2006-லிருந்து இன்றுவரை பிரதிவாதிகள்தான் தனித்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் என்னுடைய சம்மதத்தின் பேரில் இருக்கிறார்கள்.

8) என்னுடைய சம்மதத்தின் பேரில் இருந்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த தேதியிலிருந்து நான் சம்மதம் கொடுத்தேன் என்றால் தீர்ப்பிற்கு பின்பாகும். தேதி ஞாபகம் இல்லை. நான் தீர்ப்பு தேதிக்கு பிறகு சம்மதம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெயரில் வீட்டு வரி செலுத்தி வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு 15.2.2006-க்கு பிறகு பிரதிவாதிகள் வீட்டு வரி செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக விபரம் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

9. வீட்டு வரி பிரதிவாதிகள் பெயரில் இருப்பதை மாற்ற நான் ஊராட்சி மன்றத்திற்கு ஏதேனும் மனுகொடுத்தேனா என்றால் ஊராட்சி செயலாளரிடம் வீட்டு வரி போடக்கூடாது என தாவா கொடுத்துள்ளோம். நான் எழுத்து மூலமாக மனு எதுவும் தரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் பெயரில் வரி போடக்கூடாது என்று நான் தாவா சொல்லியுள்ளேன் என்ற விபரத்தை தாவா பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவித்த வருவதை தடையோ, இடைஞ்சலோ, ஆட்சேபணையோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையோ படித்துபார்த்தேனா என்றால் படித்துபார்த்தோம். அதற்கு பதில்வழக்குரை தாக்கல் செய்துள்ளோம்.

10. பிராதில் கூறியுள்ள நான்குமால்கள் தவறு என்று சொல்லியிருப்பதற்கு எங்களது பதில்வழக்குரையில் பதில் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நாங்கள் அனுபவிக்கவில்லை என்றாலும், பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. சொத்தை ஒப்படைக்க பரிகாரம் கோரி பிராதை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், சட்டகாலத்திற்கு மேல் எங்களுக்கு தெரிந்தே பாத்தியத்திலும், அனுபவித்திலும் இருந்து வருவதாலும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல.

11. தாவா வழக்கில் பிரதிவாதிகள் எதிரிடை பாத்திய அனுபவம் செய்வதாக கூறியுள்ளதில் நான் அதற்காக விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. எனவே நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பாத்தியம் கோராமல் சுவாதீனம் மட்டும் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் வீட்டிற்கு மதிப்பு எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. உண்மையான அடிமனை மதிப்பும், மேற்கோப்பின் மதிப்பும் நீதிமன்றத்திற்கு தெரிவிக்காமல் நான் செலுத்தியுள்ள நீதிமன்றக்கட்டணமும் தவறானது என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியவுடன் பிரதிவாதிகள் வந்து பேசிய போது வழக்கு

தாக்கல் செய்யவில்லை என்று நான் கூறினேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு சொன்னதால்தான் பிரதிவாதிகள் பதில் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதிகளின் எதிர்கோருரிமையின் படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கக்கூடியதாக உள்ளது என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.